**சுருக்கம்**

தமிழ்நாடு பள்ளிக் கல்விப் பணி - முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் அதனையொத்த பணியிடங்கள் - காலிப் பணியிடம் நிரப்புதல் - பணியிட மாறுதல் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர் மற்றும் அதனையொத்த பணியிடத்தில் பணிபுரியும் அலுவலருக்கு தற்காலிகப் பதவி உயர்வு அளித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வி [பக1(1)]த் துறை**

**அரசாணை (நிலை) எண்.100**

**நாள் 03.06.2022.**
திருவள்ளுவர் ஆண்டு 2053
சுபகிருது, வைகாசி - 20.

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.170, பள்ளிக் கல்வி [பக1(1)]த் துறை, நாள் 08.12.2021.
2. பள்ளிக் கல்வி ஆணையரின் கடித ந.க.எண். 30395 /அ1 /இ1 /2022 நாள் 18 .05.2022 மற்றும் 01.06.2022.

----------

**ஆணை:-**

பள்ளிக் கல்வித் துறையில் தமிழ்நாடு பள்ளிக் கல்விப் பணியின் கீழுள்ள வகுப்பு III-ஐ சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் அதனையொத்த பணியிடத்தில் பணிபுரியும் கீழ்க்கண்ட அலுவலர்களுக்கு நிர்வாக நலன் கருதி, அவர்களது பெயருக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள பணியிடங்களுக்கு பணியிட மாறுதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

| வ. எண். | அலுவலரின் பெயர் மற்றும் தற்போது பணிபுரியும் பணியிடம் திரு. / திருமதி. | பணியிட மாறுதல் அளிக்கப்படும் அலுவலகம் |
|---|---|---|
| 1. | திரு.ஆர் சுவாமிநாதன்<br>முதன்மைக் கல்வி அலுவலர்,<br>மதுரை | முதன்மைக் கல்வி<br>அலுவலர்,<br>சிவகங்கை. |
| 2. | திருமதி ஏ. நசருதீன்<br>முதன்மைக் கல்வி அலுவலர்,<br>நீலகிரி | முதன்மைக் கல்வி<br>அலுவலர், திண்டுக்கல். |

| | | |
|---|---|---|
| 3. | திரு. பி.ஏ. ஆறுமுகம்<br>முதன்மைக் கல்வி அலுவலர்,<br>திருவள்ளூர் | துணை இயக்குநர்<br>தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்,<br>சென்னை-6. |
| 4. | திரு. எஸ். மணிவண்ணன்<br>முதன்மைக் கல்வி அலுவலர்,<br>சிவகங்கை | முதன்மைக் கல்வி அலுவலர்,<br>புதுக்கோட்டை. |
| 5. | திரு எஸ். சத்தியமூர்த்தி முதன்மைக் கல்வி அலுவலர்,<br>புதுக்கோட்டை | நிர்வாக அலுவலர்,<br>தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆய்வு மையம்,<br>தஞ்சாவூர். |
| 6. | திருமதி வி.வெற்றிச்செல்வி,<br>துணை இயக்குநர் (நிர்வாகம்)<br>தொடக்கக் கல்வி இயக்ககம்,<br>சென்னை -6. | முதன்மைக் கல்வி அலுவலர்,<br>காஞ்சிபுரம். |
| 7. | திருமதி.ஆர்.திருவளர்ச்செல்வி,<br>முதன்மைக் கல்வி அலுவலர்,<br>காஞ்சிபுரம். | முதன்மைக் கல்வி அலுவலர்,<br>திருப்பூர். |

2. பள்ளிக் கல்வித் துறையில் தமிழ்நாடு பள்ளிக் கல்விப் பணியின் கீழுள்ள வகுப்பு III-ஐ சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் அதனையொத்த பணி நிலையில் தற்போது காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்பும் பொருட்டு, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துருவின் அடிப்படையில், தமிழ்நாடு பள்ளிக் கல்விப் பணி வகுப்பு IV-ஐச் சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் அதனையொத்த பணியிடத்தில் பணிபுரியும் பணி முதுநிலையில் முந்துரிமையில் உள்ள கீழ்க்கண்ட அலுவலர்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 47(1)-ன்கீழ் முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் அதனையொத்த பணியிடத்திற்கு தற்காலிகப் பதவி உயர்வு அளித்து, அவர்கள் பெயருக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் அதனையொத்த பணியிடங்களில் பணியமர்த்தி அரசு ஆணையிடுகிறது. கீழ்க்கண்ட அலுவலர்களுக்கு வழங்கப்படும் இத்தற்காலிக பதவியுயர்வு பின்வரும் காலத்தில் முன்னுரிமை கோரும் உரிமையை அவர்களுக்கு அளிக்காது என்ற நிபந்தனைக்குட்பட்டது.

| வ. எண். | பெயர் மற்றும் தற்போது பணிபுரியும் பணியிடம் | தற்காலிக பதவி உயர்வு அளித்து நியமனம் செய்யப்படும் பணியிடம் |
|---|---|---|
| 1. | டி.இராமன், மாவட்டக் கல்வி அலுவலர், நாமக்கல், நாமக்கல் மாவட்டம். | முதன்மைக் கல்வி அலுவலர், திருவள்ளூர் மாவட்டம். |
| 2. | கே.கார்த்திகா, மாவட்டக் கல்வி அலுவலர், உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம் | முதன்மைக் கல்வி அலுவலர், மதுரை மாவட்டம். |
| 3. | எஸ்.தாமோதரன், மாவட்டக் கல்வி அலுவலர், செங்கல்பட்டு, செங்கல்பட்டு மாவட்டம். | முதன்மைக் கல்வி அலுவலர், நீலகிரி மாவட்டம். |
| 4. | எம்.விஜயா, மாவட்டக் கல்வி அலுவலர், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம். | துணை இயக்குநர் (நிர்வாகம்) தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை -6. |

3) இவ்வாணை உடனடியாக நடைமுறைக்கு வருகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை-6.
சம்பந்தப்பட்ட அலுவலர் / முதன்மைக் கல்வி /
மாவட்டக் கல்வி அலுவலகங்கள் (பள்ளிக் கல்வி ஆணையர் வழியாக)
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
கருவூல கணக்கு ஆணையர், சென்னை- 35.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு / மாவட்ட கருவூல கணக்கு அலுவலர்.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்.

<u>நகல்</u>
பள்ளிக் கல்வித் துறையின் அனைத்துத் துறைத் தலைவர்கள், சென்னை-6 / 2.
பள்ளிக் கல்வித் துறையின் அனைத்து அலுவலர்கள்/ பிரிவுகள், சென்னை-9.
பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9
பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர், சென்னை-9.
இருப்புக்கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

3/6/22
பிரிவு அலுவலர்.